கண்ணன் பெற்றோர் கைது: விசாரணையில் புதிய திருப்பம்

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily

மலர் 8 (27-1-67) இதழ் 347

பராபவ ஷவ்வால் 15 தை 14 வெள்ளிக்கிழமை

இடுப்புச்சங்கிலியை பொலிசார் கண்டுபிடித்தனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

முல்லைத்தீவில் காணாமற் போய் பின்னர் அங்குள்ள ஒரு வீட்டுவளவில் புதைக்கப்பட்டநிலையில் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்ட கண்ணனின் சடலம் குறித்து நடைபெற்று வரும் விசாரணையில் இப்பொழுது புதிய திருப்பமொன்று ஏற்பட்டுள்ளது. முல்லைத்தீவைச் சேர்ந்த பொன்னுத்தம்பியின் ஒரே மகனான கண்ணன் (9 வயது) இரண்டு வாரங்களாகக் காணாமற் போனதும் பின்னர் வெளியில் (துப்பறியும்) நாய்வரவழைக்கப்பட்டதும் சிறுவனின் சடலம் முல்லைத்தீவில் ஒரு வீட்டு வளவுக்கு அருகாமையில் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டிருந்ததும் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

இச்சிறுவனின் மரணம் குறித்து யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுக்குச் சென்ற பொலிஸார் அங்கு நடத்திய விசாரணைகளைத் தொடர்ந்து கண்ணனின் தந்தை பொன்னுத்தம்பியும் கண்ணனின் தாயாரும் சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்டு விசாரணைக்காக இங்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் விசாரணை செய்த பொலிஸார், சிறுவன் புதைக்கப்பட்டிருந்த இடத்துக்குச் சமீபமாக இடுப்புச் சங்கிலியொன்றைக் கண்டுபிடித்துள்ளனர். கண்ணனின் மரணம் சம்பந்தமாக பொலிசார் நாலவரைத் தேடிவருவதாகத் தெரியவருகிறது.

சிலமாதங்களுக்குமுன்னர் தெஹிவளையில் [illegible] என்றசிறுவன் ஒருவன் இறந்துகிடக்கக் காணப்பட்டதும் விசாரணையின்போது சிறுவன் கொலைசெய்யப்பட்டதாகக் கருதப்பட்டு சிறுவ

(5-ம் பக்கம் பார்க்க)

ஆங்கில

ஆசிரியர்களுக்கு தகுதிப் பரீட்சை

மார்ச் மாதத்தில் நடைபெறும்

கொழும்பு, வியாழன்

பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கில ஆசிரியர்களாகவும், ஆங்கிலப்பாடம் போதிப்பவர்களாகவும் கடமையாற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் மார்ச் மாதத்தில் தகுதிப்பரீட்சை நடைபெறவிருக்கிறது. ஆங்கில ஆசிரியர்கள் அனைவருக்கும் கல்விப்பகுதி டைரக்டர் ஜெனரல் வைக்கவிருக்கும் இத்தகுதிப் பரீட்சை கட்டாயபரீட்சையாகும்.

நாடெங்கிலுமுள்ள பாடசாலைகளில் ஆங்கிலப்பாடம் படிப்பிக்கும் ஆசிரியர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவர். எஸ். எஸ். ஸி அல்லது ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சை ஆங்கிலமொழிமூலம் எடுத்து சித்தியடைந்து ஆசிரியத் தராதரப்பத்திரம் பெறாத ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களும் தமிழ் அல்லது ஆங்கில மொழிமூலம் எஸ. எஸ்.ஸி. அல்லது ஜி. ஸி ஈ (சாதாரணம்) ஆங்கிலம் ஒருபாடமாகச்சித்தியடைந்துஆசிரிய தராதரப்பத்திரம் பெறாத ஆசிரியர்களாகக் கடமையாற்றும் ஆசிரியர்களும் எஸ். எஸ். ஸி, தராதரத்துடன் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வருபவர்களும் சேவையின் பின் சேவைத்தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியர்களாகப் பணிபுரிவோரும் இத்தகுதிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

இரண்டு மணிநேர எழுத்துப்பரீட்சையும் வாய்மூலப் பரீட்சையும் நடைபெறும்.

'ஈழநாடு' நடுநிலைமைக்கு அரசாங்க அதிபர் பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

'தேசியபத்திரிகைகள் நடுநிலைமையிலிருந்து மக்களுக்கும் நாட்டுக்கும் நன்மை செய்வதைத் தமதுகடமையாகக் கொள்வது நல்லது. இந்த விதத்தில் "ஈழநாடு" பெரும் பணியாற்றி வந்துள்ளது. சர்ச்சைக்குரிய விஷயங்கள் எதையும் ஆராய்ந்து உண்மையான விபரங்களையே 'ஈழநாடு' பிரசுரிக்கிறது என்பதை நான் நன்கு அறிவேன். அதன் நற்பணி தொடர்ந்து நடைபெற எல்லாவித வாய்ப்புக்களும் அதற்கு கிட்டவேண்டுமென நான் விரும்புகிறேன்'.

இவ்வாறு நேற்று முன் தினம் நடைபெற்ற 'ஈழநாடு' சைக்கிளோட்டப்போட்டி பரிசளிப்பு வைபவத்தின் போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா கூறினார்.

"சேமிப்பதில் வவுனியா சாதனை நிலைநாட்டியுள்ளது"

வவுனியா, புதன்

வவுனியா மாவட்ட சேமிப்பு இயக்கக்குழுக்கூட்டம் வவுனியாக் கச்சேரியில் வவுனியா அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு வவுனியா மாவட்ட விவசாய அதிகாரி திரு. பி. மாணிக்கவாசகர், வவுனியா கல்வி அதிகாரி, வவுனியா தபால்இலாகா அதிகாரி திரு. பொன்னம்பலம், வவுனியா கூட்டுறவு உதவி ஆணையாளர் வவுனியாகமத்தொழில் பகுதி அதிகாரி தேசிய சேமிப்பு இயக்க மேற்பார்வையாளர் திரு கணபதிப்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர்.

வவுனியாவில் மே மாதம் 1-ம்திகதி தொடக்கம் 31-ம் திகதிவரையும் சேமிப்பு வாரம் சகல காரியாலயங்களின் பிரிவிலும், பாடசாலைகளிலும் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

தேசிய சேமிப்பு பகுதி உதவிஆணையாளர் திரு வி. ரத்தினசபாபதி (?) பேசுகையில் கூறியதாவது:-

"சேமிப்பதில் வவுனியா மாவட்டம் சாதனை யொன்றை நிலைநாட்டியிருக்கிறது.

வவுனியா மாவட்டம்சகல பகுதிகளிலும் பார்க்க கூடுதலாக கடந்தவருடம் சேமித்திருந்தது. ஆனால் இந்தசேமிப்பால் மக்கள் பலனடைவதோடு அரசாங்கமும் பலனடையக்கூடியதாக இருக்கிறது. இன்று ஏற்பட்டுள்ள உணவுத்தட்டுப்பாடு, வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவைக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைக்க உதவும். இப்படிப்பட்ட சேமிப்பில் பாடசாலைப் பிள்ளைகள் வயதுவந்தோர் (?) ஈடுபடலாம்.

உணவு இலாகாவின் சுறுசுறுப்பு

வவுனியா, வியாழன்

வவுனியா கச்சேரியிலுள்ள உணவு உற்பத்தி இலாகா மிகவும் சுறுசுறுப்புடன் இயங்க ஆரம்பித்துள்ளது. தேவையான உரம், கிருமி நாசினி, உணவு உற்பத்தியைப் பெருக்கல், விவசாயிகளுக்கு உள்ள கஷ்டம், சகலகளில் உள்ள கஷ்டம் போன்றவை உடனுக்குடன் நிவர்த்திசெய்வதற்காக (?) செய்து கொண்டிருக்கிறது.

யானையால் தாக்குண்டு இரண்டு நாள் கிடந்தார்

பூநகரி, வியாழன்

பூநகரி நாச்சிக்குடாவைச் சேர்ந்த ஏ. லக்சுமணன் என்பவர் சென்றதிங்கட்கிழமை காலை பூநகரி வாடிவடியிலிருந்து பல்லவராயன் கட்டுக்கு தனிமையாகச்சென்று கொண்டிருந்தபோது எட்டாம் கட்டைவடியில் காட்டு யானை யொன்றினால் தாக்கி வீசப்பட்டார். அறிவுமயங்கிய நிலையில் அதே இடத்தில் இரண்டுதினங்களாகக் கிடந்த அவரை எம். நடராசா என்னும் மாணவன் பார்த்ததும், கிராமசேவையாளருக்குத் தகவல்கொடுத்தார். கிராமசேவையாளர் எஸ். பேரம்பலம், மற்றும் எஸ். சபாரத்தினம், கிராம அபிவிருத்தி அதிகாரி போகசுந்தரம் ஆகியோரும் ஸ்தலத்துக்குச்சென்று இலட்சுமணனை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர், அவரைப் பரிசோதித்த வைத்திய அதிகாரி டாக்டர் இருச்செல்வம் அவர் பலவீனமாக இருப்பதாகவும் காயம் அதிகமில்லையென்றும் தெரிவித்தார்.

வவுனியாவிலுள்ள ஏழை மாணவருக்கு இலவச புத்தகம்

நகரசபை கொடுக்கிறது

வவுனியா, வியாழன்

வவுனியா நகரசபை எல்லைக்குட்பட்டு வசிக்கும் ஏழைப் பாடசாலை மாணவர்களுக்கு வவுனியா நகரசபை இவ்வருடம்சுமார் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களை இலவசமாக கொடுக்கிறது.

1964ம் வருடம் ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களை இலவசமாகவும், இரண்டாயிரத்துஐநூறு ரூபா பெறுமதியான புத்தகங்களையும் கொடுத்தது.

இவ்வருடம்5 ஆயிரம்ரூபா பெறுமதியான புத்தகங்களை பிள்ளைகளுக்கு இலவசமாக கொடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

வவுனியா நகரசபைத் தலைவர் திரு. ம. பொன்னையா சகலபாடசாலைத் தலைமையாசிரியர்களுக்கும் உடன்டியாக தேவையான புத்தகம், ஏழைப்பிள்ளைகளின் விபரங்களை அனுப்புமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

டில்லியில் நடைபெற்ற குடியரசுதின நிகழ்ச்சிகள்

அலங்கார அணிவகுப்புகளை 10,00,000 மக்கள் கண்டுகளித்தனர்

புதுடில்லி, ஜன. 26

இந்தியாவின் பதினெட்டாவது குடியரசு தினத்தையொட்டி இன்று நாடெங்கிலும் பல ராஜ்யங்களிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் டில்லியில் இடம் பெற்ற அணிவகுப்பு மரியாதையும் மற்ற நிகழ்ச்சிகளும் முதலிடம் வகித்தது.

முதலில் இடம்பெற்ற படையினரின் அணிவகுப்பு மரியாதையை உபராஜ்டிரபதி டாக்டர் சகீர் ஹுசைன் ஏற்றுக்கொண்டார். இதனை பத்துலட்சம் மக்கள் கண்டுகளித்தனர்.

இதன்பின்னர் இடம் பெற்ற அணிவகுப்பில், இந்தியாவில் (ஆவடியில்) தயாரிக்கப்பட்ட டாங்கிகள் கலந்து கொண்டன. 1965-ல் நடைபெற்ற இந்திய-பாகிஸ்தான் சண்டையில் கலந்துகொண்டு எதிரிகளைச் சுட்டு வீழ்த்திய டாங்கிகளும் இதில் கலந்துகொண்டன.

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

விற்பனைக்கு

இடவசதியில்

உள்ள வருடகாலமாக 30 தையல்மிஷின்கள் தயாரித்து தற்போதைக்கு இடவசதியில் ஒன்றில் மட்டுமாவது செய்வதற்கோ அல்லது விற்பனைக்கோ இருக்கிறது. ரூ. 1500/-. 18, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2268

சோழிக்குஞ்சுகள்:

சோழிப்பண்ணை வகுப்புக்குஞ்சு வாலிபர்களுக்கு எக்காலத்திலும் 8000 குஞ்சுகளுக்கு கணக்கெடுப்பதை மட்டுமே தொடர்ந்து தெரிக்கிறோம். சேல் விலை -/40 சதம். மேடு விலை ரூபா 2/50 சதம். குருஜி ஏஜென்ஸிஸ், வவுனியா. 2318

வாணி:

வண்டத்தலைப்பு பிரதான வீதியிலும் கடற்கரை எல்லைக்குச் செல்லுகின்ற வாணி விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் பொன்னையா நினைவராசா, பிரதான வீதி, வண்டத்தலைப்பு அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். 2319

கல்வி

வகுப்புகள்,

ஜீ. சி. ஈ. உயர்/சாதாரண தர வகுப்புகள் ஆரம்ப வகுப்புகள் ஆகியன/மாலை வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. யாழ்ப்பாண மூயூக்டோரியல் கல்லூரி அதிபரைப் பிரதியாரி சோலையடி, நல்லூர், யாழ்ப்பாணம்/தெல்லிபழைரவெட்டி. 2266

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்

திருமண அழைப்பு

திரு நெடுவேலியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற கிராம சபை உத்தியோகத்தர் திரு மேற்கார்வை வயிரமுத்து அவர்களின் புதல்வன் திரு. ஜே. என். பொன்னையா அவர்களின் புதல்வன் திருநிறைசெல்வன் குலசிங்கம் (ஆசிரியர், சண்முகலிங்கம் மகாவித்தியாலயம், வலிகாமம்) அவர்களுக்கும், எழுதுமட்டுவாள் திரு. செல்லத்துரை வேதநேசன் அவர்களின் புதல்வி திருமதி செல்வி குளோறியா சந்திரராணி அவர்களுக்கும் 1-2-67-ந் திகதி புதன்கிழமை காலை 7 மணி வளவில் திருநெடுவேலி புனித சவேரியார் ஆலயத்தில் மேல் விவாகசடங்கு நிகழும். சுற்றத்தாரையும் நண்பர்களையும் தவறாது அழைத்திருக்கும். ஜே. எஸ். பொன்னையாவும் மனைவியாரும். திருநெடுவேலி, யாழ்ப்பாணம் — 2. செ. வேசுநேசனும் மனைவியாரும். "ஜெயவாசம்", எழுதுமட்டுவாள். 2270

காணவில்லை

மூக்குக்கண்ணாடி:

ஒருநாள் நிற பிறேம் முடைய மூக்குக் கண்ணாடி காணாமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் 5, இரத்தினசபாபதி, வொலிகை நிலையத்தடி, ஆனைக் கோட்டை என்ற விலாசத்தினிடம் தயவு செய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 2271

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 4-45, 1-00, 9-45
போயாதினங்களில் 4 காட்சிகள்
HIS and HERS

3-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொக்குவில்)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோ)
மொடேர்ன் (பதுளை) லக்ஷ்மி (ரத்னபுரி) ஜீவிதா (ஹபுடளை)

ஆண்டவன் உலகத்தின் முதலாளி. அவனுக்கு நான் ஒரு தொழிலாளி. அன்பே உலகின் மடியின் மேலே அனைவரும் எமது கூட்டாளி.



எம்.ஜி.ஆர். - கே.ஆர். விஜயா
எம். ஆர். ராதா, அசோகன், நம்பியார்,
நாகேஷ், மனோரமா
நடிக்க
தேவர் ரிலிம்ஸ்
தொழிலாளி
டைரக்ஷன்: திருமுகம்.
இசை: திரையிசைத் திலகம் கே.வி. மகாதேவன்.

மலையா
தினசரி பிரதமகாட்சி
8-00, 6-30, 10 00
போயா தினங்களில் 10-30 முற்பகல்
கிளியோபட்ரா
பல்லின்கூடங்களுக்கு
சலுகைக் கண்டு
MANOHARA
Elizabeth Taylor, Richard Burton & Rex Harrison
in
CLEOPATRA
(Concessions to Schools available)

ஸ்ரீ கரன்ஸ்
(இணுவில்)
தினசரி 6-15, 9-30 மாலை
ஏனைய தினங்களில் 1-30 மாலை
எம். ஜி. ஆர்-ஸரோஜாதேவி
நடித்த
பணத்தோட்டம்

REGAL—JAFFNA
NOW SHOWING
Frank Sinatra
Dean Martin
in
SERGEANTS 3
(Cinemascope - Color)

லெனின் சமாதிக்கு அருகே சீன மாணவர் அட்டகாசம்

ரஷ்யா கண்டனம்

மாஸ்கோ, ஜன. 26

ரஷ்யாவில் சீன மாணவர்கள் நடத்தி கொண்டிருக்கும் குறித்த கூட்டேசம் தொடர்பாக சோவியத் யூனியன் சீனாவிடம் ரஷ்யா வன்மையாக கூட்டேசம் தெரிவித்துள்ளது.

"லெனின் சமாதிக்கு வெளியே சீன மாணவர்கள் மிகவும் கேட்கத்தேடான முறையில் நடந்துகொண்டனர்" என்று ரஷ்யாவின் கூட்டேசக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"சீனாவிலும் வேலை மாணவர்களால் நடந்து கொண்டது மட்டுமன்றி எகிப்தையும் தோற்றுவிக்க முயன்றனர். இப்படியான அட்டகாசங்கள் இனிமேல் நடைபெறுவதை ரஷ்யா அனுமதிக்காது" என்றும் அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'பிரிட்டிஷ் உதவித்திட்டத்தில்' மாற்றம் ஏற்படாது

— பொட்டப்லி

லண்டன், ஜன. 26

"பிரிட்டனின் பொருளாதார நெருக்கடி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உதவித் திட்டத்திலோ அன்றி அதன் வெளிநாட்டு கபிருத்தி இலட்சியத்திலோ எதிர்த மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை" இவ்வாறு பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சர் திரு. ஜோர்ஜ் பொட்டப்லி நேற்று லண்டனில் கூறினார். வெளிநாட்டு அபிவிருத்தி சம்பந்தமான வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டது குறித்துப் பேசிய அவர் பிரிட்டன் பல பொருளாதாரப் பிரச்சினை எதிர்நோக்கியிருந்த போதி. முன்னேற்றமடைந்துவரும் நாடுகளின் கோரிக்கைகளை வற்புறுத்த தான் தயாராக இருப்பதாக எடுத்துரைத்தார்.

"நான் இதைச்செய்வதற்கு காரணம், எதிர் காலத்தில் நான் நம்பிக்கை கொண்டிருப்பதால் தான். இன்றில் இருந்து இன்னும் 10 அல்லது 20 ஆண்டுகளில் கிழக்கத்தி தொழில் நாடுகளுக்கும் முன்னேற்றம் குன்றிய நாடுகளுக்கும் மத்தியிலான உறவுகள் உலக சமாதானத்தையும், உலக பொருளாதார அபிவிருத்தத்தையும், பாதிக்கத்தக்க முக்கியத்துவம் பெற்றிடும் என்று நான் எடுத்துகிறேன். இன்று நாம் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகளாவும் இக்கால கட்டத்தில் உலக அபிவிருத்தி பிரச்சினைக்கு நாம் என்ன செய்திருக்கிறோம் என்பதில் தான் தங்கியிருக்கிறது" என்றும் திரு. பொட்டப்லி கூறினார்.

பிரிவுபசாரம்

உடுப்பிட்டி, வியாழன்.

"உணவு உற்பத்தித்துறையில் எமது நாடு மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ளது. நாட்டு மக்கள் யாவரும் இத் துறையில் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டும். வேறும் தரிசாகக் கிடக்கும் நிலங்களைப் பயன்படுத்தி விவசாயத்திற்குப் பயன்படுத்தலாம்" என்று அரசாங்க உணவு உற்பத்தி மேற்பார்வை அதிகாரியான திரு. மு. கணபதிப்பிள்ளை பூதகிக்கு மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டுப் பொதுமக்களால் அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவில் தலைமைதாங்கிப் பேசுகையில் திரு. சே. வேலாயுதபிள்ளை கூறினார். மற்றும்பலரும் அவரின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

சுதந்திரனை ஏற்பாடுகள்

இளவாலை, வியாழன்

சுவாமி விபுலானந்தரின் சுதந்திர தினத்தைக் கொண்டாடும் பொருட்டு சுழைச்சி காரியாதிகாரி கந்தையின் காரியாதிகாரி திரு. ஆ. பொன்னுத்துரை தலைமையில் ஆரோக்கிய கூட்டம் நடைபெற்றது. சுதந்திரதினத்தை சிறப்பு முறையில் கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டது. விஷயங்களை ஆராயவும் மேலும் ஒரு கூட்டம் கூடியது. நிதி சம்பந்தமும் தெரிவுசெய்யப்பட்டன.

பிணையில் செல்ல அனுமதி

ஊர்காவற்றுறை, வியாழன்.

தென்தேசிய வாசியான சதாசிவம் அகிலன் மகேயாவை ஒரே இடத்தைச் சேர்ந்த ஐவர் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் 3ம் 4ம் 5ம் எதிரிகளான ஐவரையும் பிணையில் செல்லப்பணித்து இரு ஜெற்திரம் ஆகியோரை தலா ரூபா 1000 பிணையில் செல்ல ஊர்காவற்றுறை நீதிபதி திரு. வி. ஜே. இராசரத்தினம் அனுமதித்துள்ளார்.

எம்.பி.திரும்பினார்

பலாலி, வியாழன்.

பருத்தித்துறையில் நடந்த சோசார்பு கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் வந்த கம்பஹா எம்.பி. திரு. எஸ். டி. பண்டார நாயக்கா (சுதந்திரக்கட்சி) நேற்று விமானத்தில் கொழும்பு திரும்பினார். திரு. எஸ். சண்முகதாசனும் கூடவே சென்றார்.

உணவுஉற்பத்திக்குழு

ஊர்காவற்றுறை, வியாழன்.

நாரந்தனைப் பகுதியில் உணவுப் பொருள் விருத்தி செய்வதற்காக ஓர் அமைப்புக் கூட்டம் நாரந்தனியில் நடைபெற்றது.

நாரந்தனைக் கிராமசேவையாளர் திரு. ஏ. புண்ணியமூர்த்தி கூட்டத்திற்குத் தலைமை வகித்து உணவு உற்பத்திக் குழுவின் அவசியத்தினை விளக்கினார்.

உணவு உற்பத்திக்குழுவின் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களாவன:

தலைவர் திரு. ச. அருணாசலம் நாதர், காரியதரிசி திரு. ஏ. புண்ணியமூர்த்தி, அமைப்பாளர் திரு. வ. இளதாதபிள்ளை.

திருடி

ஊர்காவற்றுறை, வியாழன்.

ஊர்காவற்றுறை பஸ்நிலைய ரஸ்தாவில் உள்ள அரசினர் சந்திரிக்கும், வைரவர் கோவிலுக்கும் இடையே அமைந்துள்ள தந்திக்கம்பியில் திருடப்பட்டு வருகின்றன என ஊர்காவற்றுறைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. இத்திருட்டுக் கோஷ்டியினரைப் பிடிப்பதில் ஊர்காவற்றுறைப் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

மோதல்

சூதாட்டக் கோஷ்டி

ஊர்காவற்றுறை, வியாழன்

ஊர்காவற்றுறைப் பஸ் டிப்போ வருகியில் சூதாடிய கோஷ்டியினர் ஒன்பது பேரை ஊர்காவற்றுறைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இம்மாதம் 24-ந் திகதி இவர்கள்மீது வழக்குத் தொடரப்படும் என்பதும் அறியப்படுகிறது.

புதியநிர்வாகிகள்

உடுப்பிட்டி, வியாழன்.

கட்டைவேலி ஞானசாரி மாதர் கல்லூரி பெற்றோர்-ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டம் கல்லூரி அதிபர் திரு. சி. வெற்பிரகாசம் தலைமையில் நடை பெற்றது. புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: திருவாளர்கள் ஆ. சாந்திசேகரம், க. கணபதிப்பிள்ளை தலைவர்: திரு. சி. வெற்பிரகாசம். உபதலைவர்கள்: திருவாளர்கள் க. சிவநாதன், வ. தம்பிப்பிள்ளை காரியதரிசி: திரு. க. வடிவேலு. தொடர்காரி: திரு. பே. தாமு. 8 பேர் கொண்டதிர்வாகக்குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து குறித்து
ராஷ்டிரபதி எச்சரிக்கை
நாசவேலை, உண்ணாவிரத நடவடிக்கைகளுக்கு கண்டனம்

புதுடில்லி ஜன. 21

பல்வேறு பிரச்னைகளையும் சுமுகமான முறையில் தீர்த்து வைக்க முயற்சிக்காது வன்முறைகளைக் கையாளுவது குறித்து இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் கடுமையாக எச்சரிக்கை செய்துள்ளார்.

உள்நாட்டுப் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கு வன்முறைகளைக் கையாள்வதன்மூலம் இந்தியாவில் ஜனநாயகத்துக்கே பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும் டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

இந்தியக் குடியரசு தினத்தையொட்டி நேற்றிரவு வானொலிமூலம் நிகழ்த்திய உரையில்தான் டாக்டர் ராதாகிருஷ்ணன் மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், சகல பிரச்னைகளையும் விவாதம் மூலமாக அல்லது கருத்து ஒற்றுமைமூலமாகத் தீர்த்துவைக்க தலைவர்கள் முன்வர வேண்டுமென்றும் வன்முறைகளைக் கையாள்வதைக் கைவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

"நாசவேலை செய்வது சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பது போன்ற வன்முறைச் செயல்கள் இந்தியாவில் ஜனநாயகத்தைத் தீர்த்துவிடும்" என்றும் ராஷ்டிரபதி கண்டித்தார்.

"நாட்டில் எந்தப் பிரச்னைக்காகவும் குழப்பம் அல்லது ஆர்ப்பாட்டம் அல்லது அசம்பாவிதமான சம்பவங்கள் நிகழ்வது தடுக்கப்பட வேண்டும். இப்படியான நடவடிக்கைகள்மூலம் எந்தப் பிரச்னையையும் தீர்க்க முடியாது என்பதைத் தலைவர்கள் உணர வேண்டும். அரசாங்கக் கட்டினாளர்மீது லஞ்சக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தால் அவை தாமதமின்றி விசாரணைகள் மூலமாகக் களைந்தெறியப்பட வேண்டும். இவற்றை நீடிப்பதும் நல்லதல்ல" என்றும் டாக்டர் ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டார்.

"நாட்டில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்ற உயர்ந்த இலட்சியமுடைய எவரும் பலாத்கார நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள். நவீன வாழ்க்கை முறைக்கு ஏற்றமாதிரி நம்மை முன்னேற்றப் பார்க்க வேண்டும். இந்த இலட்சியப் போக்கு எல்லோரிடமும் காணப்பட வேண்டும் என்பதுதான் எனது விருப்பமாகும்" என்றும் ராஷ்டிரபதி கூறினார்.

ஜம்மு காஷ்மீரில்

காங்கிரஸ் காரியாலயம் தீ வைக்கப்பட்டது

ஜம்மு, ஜன. 26 காங்கிரஸ் கட்சியின் தலைமைக் காரியாலயத்தின்மீது தீ வைத்த கும்பலைக் கலைக்க பொலிஸார் அழைக்கப்பட்ட பொழுது, பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டது.

காஷ்மீரின் முக்கியமான இடத்தில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் பொதுக் கூட்டமொன்றைத் தொடர்ந்தே இந்த வன்முறைச் செயல்கள் தலைதூக்கின. இந்த மோதலின் போது கூட்டத்தினரைக் கலைப்பதற்காக பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஐவர் காயமடைந்தனர். (பி டி ஐ)

முஸ்லிம் பெண்கள் சீனருக்குத் திருமணம்
சிங்கியாங்கில் செங்காவலர் நடவடிக்கை

ஹாங்கொங், ஜன. 26 சீனாவில் சிங்கியாங் மாகாணத்தில் முஸ்லிம்கள் கடுமையாகத் துன்புறுத்தப்படுவதாக இங்கு கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறுபான்மையினத்தவரான முஸ்லிம்கள் மீது செங்காவலர்கள் "அடக்கு, ஒடுக்கு" நடவடிக்கைகளைக் கையாளுவதாகக் கூறப்படுகிறது.

இளம் முஸ்லிம் பெண்களைப் பலவந்தப்படுத்தி சீனர்களுக்குத் திருமணம் செய்விப்பது, மசூதிகளை உடைப்பது போன்ற நடவடிக்கைகளில் செங்காவலர்கள் இறங்கியுள்ளனராம்.

பல மசூதிகள் மூடப்பட்டுவிட்டன என்றும் கூறப்படுகிறது.

இந்திய தேர்தல் அரங்கு

நகர அபேட்சகர்கள்

சென்னை நகரில் மொத்தம் உள்ள 12 சட்டசபை தொகுதிகளுக்கு 43 பேர்களும் பார்லிமெண்டு தொகுதிகளுக்கு ஏழு பேர்களும் போட்டியிடுகின்றனர்.

காமராஜரை..

காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜரை எதிர்த்து மூவரும் தி. மு. கழகத் தலைவர் திரு. சி. என். அண்ணாதுரையை எதிர்த்து மூவரும் போட்டியிடுகிறார்கள். தமிழ் நாடு முதல் மந்திரி திரு. எம். பக்தவத்சலத்தை எதிர்த்து ஐந்து பேர் போட்டியிடுகின்றனர். நடிகர் எம். ஜி. ஆர். போட்டியிடும் பரங்கிமலைத் தொகுதியில் எம். ஜி. ஆருடன் காங்கிரஸ் அபேட்சகரும் ஜனசங்க அபேட்சகரும் போட்டியிடுகின்றனர்.

மோதல் நீங்கியது

சாத்தான்குளம் தொகுதியில் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகராகப் போட்டியிட முன்வந்த பூசலிங்கம் போட்டியிலிருந்து வாபஸ் பெற்றுவிட்டதால் எதிர்ப்பு அணிக்குள் ஏற்பட்டிருந்த மோதல் தவிர்க்கப்பட்டது.

பலமான ஆயுதம்

எதிர்ப்பு அணி காங்கிரஸை வீழ்த்த பலமான ஆயுதம் என்று தி. மு. க. தலைவர் திரு. சி. என். அண்ணாதுரை தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கூறினார்.

தள்ளுபடி

சீக்கியத் தலைவர் தாராசிங்கின் மகனுடைய அபேட்சை மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

சூறாவளி பிரசாரம்

தி. மு. க. தலைவர் திரு. சி. என். அண்ணாதுரை ஆரணி வட்டாரத்தில் 8 மணி நேரத்தில் 10 கிராமங்களில் பிரசாரம் செய்தார்.

அபராதம்

வல்வெட்டித்துறை, வியா. வல்வெட்டித்துறை ஊறணியைச் சேர்ந்த ஐயாத்துரை இராமநாதன் என்பவர் 450 கிறைபின் கஞ்சா வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. ரூபேர்ட் ஸில்வா 25 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

வானொலியில் தக்ஷநாண்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை எழுதிய கந்தப் புராணம் தக்ஷகாண்டம் உரைவெளியீட்டுவிழா கடந்த புதன்கிழமை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழா நிகழ்ச்சியை இன்று வெள்ளிக்கிழமை மாலை 7-15 முதல் 8-00 மணி வரை இலங்கை வானொலி [illegible] ஒலிபரப்பும்.

விளையாட்டுவீரர்கள்

கிருஷ்ணன், பட்டோடி நவாப் பத்மஸ்ரீ விருதுகள் பெற்றனர்

புதுடில்லி, ஜன. 26 இந்தியாவின் பதினெட்டாவது குடியரசு தினத்தையொட்டி இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் 65 பெண்களுக்கும் ஆண்களுக்கும் பத்மஸ்ரீ விருதுகள் வழங்கியுள்ளார். பல்வேறு துறைகளிலும் உயர் சேவையாற்றியதற்காக இவர்களுக்கு இந்த விருதுகள் அளிக்கப்பட்டுள்ளன.

இந்திய அட்டோர்னி ஜெனரலுக்கும் பாதுகாப்பு அமைச்சின் காரியதரிசி திரு. பி.பி.ராவுக்கும் பத்ம பூஷணம் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இசைத்துறையில் திருமதி எம். எல். வசந்தகுமாரி, திரு. அலி அக்பர் கான், ரவி சங்கர் ஆகியோருக்கு பத்ம பூஷண விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

விளையாட்டுத்துறையில் இந்திய டென்னிஸ் ஆட்டக்காரர் திரு. ராமநாதன் கிருஷ்ணன், இந்திய நெடுந்தூர நீச்சல் வீரர் திரு. மிஹிர் சென், மற்றும் பத்மாவதி ஆகியோருக்கும் பத்மபூஷண விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்திய கிரிக்கெட் வீரர் திரு பட்டோடி நவாப், ஹாக்கி வீரர்களான திரு. சங்கர் லட்சுமணன், திரு. பிருதிவிபால்சிங் ஆகியோருக்கு திரைப்பட பின்னணிப் பாடகர் திரு. மொகமது ரபீக், தயாரிப்பாளர் திரு. முகர்ஜி, நடிகர் நரசிம்மராவ் ஆகியோருக்கும் பத்மஸ்ரீ விருதுகள் அளிக்கப்பட்டுள்ளன.

இந்திய அணுசக்தி நிலையத்தைச் சேர்ந்த கோபால ஐயங்கார், இந்திய விஞ்ஞான கழகத்தைச்சேர்ந்த டாக்டர் சுவாமிநாதன், மற்றும் டாக்டர் ஜி.வி. செல்வம், திரு. நாகப்ப செட்டியார், திரு. வீரராகவன் ஆகியோருக்கும் சென்னை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் மகாதேவாவுக்கும் பத்மஸ்ரீ விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

மராத்தி, பஞ்சாபி, குஜராத் எழுத்தாளர் கவிஞர்களுக்கு பத்மஸ்ரீ விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

தென்வியட்னும்

உதவிப்பிரதமர் பதவி நீக்கம்

சைகோன், ஜன. 26 தென்வியட்னும் உதவிப் பிரதமர் ஜெனரல் நுாயன் ஹூ கோ பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தென்வியட்னும் தூதுகோஷ்டி யொன்றுக்குத் தலைமைவகித்து இவர் வெளிநாடு சென்றிருந்த பொழுது பதவிநீக்க உத்தரவு விபரம் அவரிடம் தெரிவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் தென்வியட்னும் திரும்பியதும் இவர்மீது சுமத்தப்பட்டுள்ள லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்யப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

டாஷ்கண்ட் நடுங்கியது

மாஸ்கோ, ஜன. 26 சோவியத்நகர் டாஷ்கண்டில் நேற்றுமூன்று தினங்கள் நிலஅதிர்ச்சி ஏற்பட்டது. உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. (பி. டி. ஐ.)

துன் ரஸாக்

கோலாலம்பூர், ஜன. 26 மலேசிய உதவிப் பிரதமர் திரு. துன் அப்துல்ரஸாக் ஏப்ரல் மாதத்தில் ஆஸ்திரேலியாவுக்கு விஜயம்செய்வார். அங்கு அவர் பத்துதினங்கள் தங்குவார். (பி. டி. ஐ.)

தீயை வழிபட்டவர்களின் விசித்திரமான கட்டடம்

அல்மா அட்டா, ஜன. 26 கஸக்ஸ்தான் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் விசித்திரமான புராதன கட்டடம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். வட்டமான சுவர்களைக் கொண்ட இந்தக் கட்டடம் டாலஸ் நதி தீரத்தில் உள்ளது. தீயை வழிபட்டவர்களின் வழிபாட்டுக் கட்டடமாக இது இருக்கலாம் என்று நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இத்தகைய கட்டடத்தை கஸக்ஸ்தான் புதைபொருள் ஆராய்ச்சியாளர் முன்னெப்போதுமே கண்டுபிடித்ததில்லை. இந்தக் கட்டடம் சிலுவையின் வடிவத்தைக் கொண்டதாகும். இதன் தென்பகுதிச் சுவரில் தீயின் வடுக்கள் காணப்படுகின்றன. தரையில் 2 அகலமு 3 மீட்டர் ஆழமான 'குழி' களில் சாம்பல் நிரம்பியிருப்பதை ஆராய்ச்சியாளர்கள் அவதானித்தனர், மட்பாண்டங்களின் பகுதிகளையும், அலங்காரப் பாத்திரங்களின் பகுதிகளையும் இவர்கள் கண்டெடுத்துள்ளனர். 6-7 வது நூற்றாண்டில் இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டிருக்கலாம் என்று நிபுணர்கள் கருதுகிறார்கள்.

இங்கு பண்டைய கிராமம் ஒன்றின் எச்ச சொச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தானியங்களும், வைக்கோல்களும், மட்பாண்டங்களும் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்தப் புராதன கிராமத்து மக்கள் விவசாயம், நெசவு, மட்பாண்ட உற்பத்தி ஆகியவற்றில் ஈடுபட்டிருந்தனர் என்பதைக் காட்டிக்காட்டும் பொருட்களும் எடுக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

ஆன்ம சாக்ஷாத்காரம் பெறுவதே மதங்களின் சாரம் இப்பேரானந்தப் பிராப்தியைப் பெறுவதற்குப் பெரியோர்களால் வகுக்கப்பட்டுள்ள வெவ்வேறு சாதனங்கள் இன்றியமையாதனவாகும். — சுவாமி சிவானந்தசரஸ்வதி

ஈழநாடு

ELANADU National Tamil Daily, Post Box 49 JAFFNA
Telegram ELANADU Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு தை மீ 14உ (27-1-67)

அசமந்தப்போக்கு

அரசாங்க இலாகாக்களின் கவனக்குறைவும், 'நத்தைவேகத்தில்' அவை கள் நடைபெறுவதும் எத்தனை பேராபத்தை ஏற்படுத்தக் கூடுமென்பதற்கு தென்னாபிரிக்காவின் பிரதமர் திரு. வேர்வூர்ட்டின் கொலைச் சம்பவம் ஒரு சிறந்த உதாரணம். நமது நாட்டில் உணவு, உப உணவுப் பொருள்களுக்குப் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதும் மக்கள் கஷ்டப்படுவதும் மற்றோர் உதாரணம்.

தென்னாபிரிக்க பார்லிமெண்டில் பிரதமர் வேர்வூட் சென்ற வருடம் செப்டம்பர் மாதம் குத்திக் கொலைசெய்யப்பட்டார். அந்தப் பார்லிமெண்டில் தூதுவனாகக் கடமையாற்றி வந்த ஸவெண்டாஸ் என்பவனே பிரதமரைக்குத்திக் கொலை செய்தவன். ஸவெண்டாஸின் போக்குகளைக் கவனித்த தென்னாபிரிக்க உள்விவகார அமைச்சு, அவனை "விரும்பத்தகாதவன்" என்று கணித்து "நாடு கடத்துவதற்கு" 1965-ம் ஆண்டின் பிற்பகுதியில் உத்தரவு பிறப்பித்திருந்தது. ஆனால் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் 4-ந்திகதி வரை அந்த உத்தரவு செயல்படவில்லை யென்பதை உளவு கண்டு பிடித்தது. மீண்டும் நாடு கடத்தும் உத்தரவில் உள்நாட்டு அமைச்சர் செப்டம்பர் முதல் திகதி கைச்சாத்திட்டார். ஒரு வாரத்துக்குள் அவன் பிரதமரைக் கொலை செய்துவிட்டான். இத்தலைப்பிரதமர் கொலை சம்பந்தமாக விசாரணை செய்த கமிஷன் வெளியிட்டிருக்கிறது. இது தென்னாபிரிக்காவில் அரசாங்க இலாகாக்கள் இயங்கும் "திறமை"யின் விளைவினால் நேர்ந்தது. இன்று நமது அரசாங்க இலாகாக்கள் இயங்கும் முறையைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. ஸவெண்டாஸ் தென்னாபிரிக்க பிரதமரை ஒரே நேரத்தில் குத்திக்கொலை செய்துவிட்டான். நமது உணவு இலாகா, இந்நாட்டு மக்களை பட்டினிபோட்டு 'கொஞ்சம் கொஞ்சமாக' கொல்லப்பார்க்கிறது.

(1) அரிசித்தட்டுப்பாடு ஏற்படுமென்பதை நேரத்துக்கே அரசாங்கத்துக்கு எச்சரிக்கை கொடுக்கத் தவறியது. (2) அரிசியின் அளவு குறைக்கப்பட்டதும் முக்கிய உப உணவுப் பொருளான கோதுமை போதிய அளவு கையிருப்பிலிருக்கிறது என்று அரசாங்கத்துக்குத் தவறான தகவல்கொடுத்து தவறான வழிகாட்டியது. (3) மற்றும் குறையுள்ள உப உணவுப் பொருள்களின் இறக்குமதியின் அவசியம் பற்றி உரிய சமயத்திலேயே யோசனை கூறத் தவறியது. (4) கையிருப்பிலுள்ள உபஉணவுப் பொருள்களை பொது மக்கள் யாவருக்கும் சமமாகப் பகிர்ந்து செய்வதற்கான நடவடிக்கை எடுக்கத்தவறியது இப்படி இன்னும் பல தவறுகளை உணவு இலாகா செய்துள்ளது. இதன் விளைவுகளை பொதுமக்கள் இப்பொழுதே அனுபவித்து வருகின்றனர். பொதுமக்கள் மட்டுமல்ல அரசாங்கமும் அனுபவிக்கிறது. தொடங்கஸ்லந்தை உபதேர்தல் முடிவும் அதன் விளைவுகளில் ஒன்று. அரசாங்க இலாகாக்கள் அதாவது அதிகாரவர்க்கத்தினரின் அசமந்தப்போக்கு அல்லது வேண்டுமென்றே செய்யும் விஷமத்தனம் இனியும் நீடித்தால் மக்கள் உயிர்வாழ்வதே கஷ்டமாகிவிடும். நாட்டில் அமைதி நிலவ இடமிராது.

இதனால்தான் அரசாங்க கட்சியின் ஆசன எம். பிக்கள் சிலர் பிரதமரின் கவனத்துக்கு அதிகார வர்க்கத்தினரின் தவறுகளைச் சுட்டிக்காட்டியிருப்பதுடன் ஆளும் கட்சியின் அவசர கூட்டத்தைக் கூட்டுமாறும் கேட்டுள்ளனர். உப உணவுப் பொருள்களுக்குத் தொடர்ந்து தட்டுப்பாடு நிலவினால் அந்த எம். பிக்கள் எப்படித்தான் தங்கள் தொகுதி மக்கள் கண்ணில் விழிக்கமுடியும்?

அரசாங்கத்தின் கொள்கைகளை அமுல் செய்ய வேண்டிய அரசாங்க அதிகாரிகள் தான் நாட்டின் நிர்வாகத்தை நடத்துபவர்கள். அரசாங்கம் அமைக்கும் அரசியல் வாதிகள் இன்றுஒருவராகவும் நாளைவேறொருவராகவும் இருப்பர். ஆனால் நிர்வாகத்திலுள்ள நிரந்தர அதிகாரிகள் அப்படியல்ல இவர்கள் அரசியல் கலப்பின்றி இருந்தால் தான் நிர்வாகம் சீராக நடைபெறமுடியும். துரதிர்ஷ்டவசமாக நமது நாட்டில் அரசாங்க ஊழியர் மத்தியிலும் அரசியல் குதிக்கும் இடம்பெற்று அதிகாரவர்க்கத் திமிர் ஊறிவிட்டது.

உணவு இலாகா, இந்நாட்டு மக்கள் உயிர் வாழ்வதற்கான மிகப் பெரும் பொறுப்பு வாய்ந்த இலாகாவாகும். இது மக்கள் நலனில் சிறிதும் அக்கறை கொள்ளாமலிருக்குமானால் இந்த இலாகா இருக்கவேண்டிய அவசியமே இல்லை. உணவு நெருக்கடி ஏற்பட்ட சமயத்திலேயே உணவு இலாகாவின் குறைகளை எடுத்துக் காட்டி அந்த இலாகாவை சீர்திருத்தி அமைக்க வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டியிருந்தோம். இப்பொழுதாவது அரசாங்க எம். பிக்களுக்கும் மற்றையோருக்கும் 'விஷயம்' விளங்கியிருக்கிறதே, இது போதும். யுத்த காலத்தில் உலகில் பல நாடுகளில் உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடிய போது இந்தியாவில் ஆயிரக்கணக்கான மக்கள் பட்டினியால் மாண்டனர். அன்றுகூட இலங்கையில் மக்கள் உணவு நெருக்கடியின் தாக்கத்தை உணரவேண்டிய நிலை ஏற்படவில்லை. சிறந்த முறையில் உணவுக் கொள்கை வகுக்கப்பட்டு அமுல் நடத்தப்பட்டது. அச்சமயத்திலேதான் உணவுப் பொருள்கள் மக்கள் எல்லோருக்கும் சமமாகக் கிடைக்கவேண்டுமென்பதற்காக பங்கீட்டு முறையும் இதைச் செவ்வனே செய்யும் பொருட்டு கூட்டுறவு இயக்கமும் தொடக்கப்பட்டது. இன்று கூட்டுறவுச் சங்கங்களையும் சமாஜங்களையும் கூட உணவு இலாகா புறக்கணிக்கிறது. இதனால் ஊழல்களுக்கும் கொள்ளை லாபத்துக்கும் அதிக வாய்ப்புக் கிடைக்கிறது. உணவு விநியோகத்தில் சரியான கவனம் செலுத்தப்பட்டால் இன்றைய நெருக்கடி நிலை பெருமளவு குறையும். அரசாங்கம் இனியும் உணவு இலாகாவின் அசமந்தப் போக்கை சகித்துக்கொண்டிருப்பது [illegible] நிலைக்காது.

புதிய விவசாய விஸ்தரிப்பு அதிபர்

வவுனியா, வியா. வவுனியா மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிபராக திரு. பி. மாணிக்கவாசகர் இம்மாதம் தொடக்கம் பதவி ஏற்றுள்ளார். இவர் முன்னர் பொலநறுவை யின் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிபராக கடமையாற்றி வந்தார்.

சுன்னாகத்தில் புதிய வீதி

யாழ்ப்பாணம், வெள்ளி. சுன்னாகத்தில் வீதியொன்றுக்கு 'செல்லாச்சி அம்மையார் தெரு' என்று புதிய பெயரிடப்பட்டுள்ளது. சுன்னாகம் பட்டினசபையின் தீர்மானப்படி இப்புதியபெயர் சூட்டப்பட்டது.

செல்லாச்சி அம்மையாரின் குருபூசைத்தினத்தன்று காங்கேசன்துறை வீதியிலிருந்து அவர் இல்லத்துக்குச் செல்லும்வீதி புதுப் பெயருடன் திறந்துவைக்கப்பட்டது. வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. அம்பிகைபாகன் இவ்வீதியைத் திறந்து வைத்தார். சுன்னாகம் பட்டினசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் தலைமைவகித்தார்.

"பஸ்சேவை வேண்டும்"

ஊர்காவற்றுறை, வியா. இதுவரை பஸ்சேவை இல்லாத வீதிவழியாக பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு மண்கும்பான் மக்கள் இ. போ. ச. வைக் கேட்டுள்ளனர்.

வெள்ளைக் கடற்கரை வழியாகவுள்ள பள்ளிவாசல்வழியாக இந்த பஸ் சேவையை வேலணைக்கு விடலாம் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

இரட்டைத்தட்டுபஸ்சேவை

பண்டத்தரிப்பு, வியாழன். சண்டிருப்பாய்- கீரிமலை 788 இலக்க பஸ் சேவையில் இரட்டைத்தட்டு பஸ்தான் சேவையில் ஈடுபட்டது. இவ்வாலிப்பகுதிக்கு இரட்டைத் தட்டு பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டது. இதுவே முதல் தடவையாகும்.

சமாதான நீதவான்

ஊர்காவற்றுறை, வியா. புங்குடுதீவு கல்வி வளர்ச்சி கழகத்தின் தலைவரும், சமூகத் தொண்டருமான திரு. கா. மதியாபரணம் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

"சித்தாந்த திருமுறைகளை அவமதிக்கக்கூடாது"

உடுவில், வியா. "மொழியினாலோ, சமூக சம்பந்தமான விஷயங்களில் மட்டுமே நாம் ஒன்றுபட்டு உழைத்து இந்தநாட்டில் சமதர்மத்தை நிலைநாட்ட முற்படவேண்டும், சமயசம்பந்தமான ஆசாரங்களை ஒதுக்கி வேதாகம சுற்றுக்களையும் நம்முன்னோர் கண்டுநெடுங்காலமாக போற்றிவந்த ஆசாரஅனுஷ்டானங்களையும்மீறி சமதர்மத்தை நிலைநாட்ட விளைவது எவ்வழிவையும் துன்பத்தையுமே கொடுக்கும். சைவசமய கோட்பாடுகளை நாம் அவமதித்து வந்தால் நாம் சைவ மதத்தவர்களாக மாட்டோம்"

சுன்னாகம் சைவானுஷ்டான பாதுகாப்புச்சபையின் ஆதரவில் சுன்னாகம் கதிரமலைச்சிவன் கோவிலில் நடைபெற்ற சைவநெறிப் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் பிரம்ம ஸ்ரீ. கு. பாலகந்தரக் குருக்கள் மேற்கண்டவாறு கூறினார். கூட்டத்திற்கு தலைமை வகித்த திரு. த. சிவலிங்கம் தமது தலைமை உரையில் தர்மகர்த்தாக்களை நாம்மேற்கொள்ள வேண்டுமே தவிர சமயாசாரங்களை நிந்திப்பது கூடாது. சமய நிந்தனை செய்வதனால் ஆலயங்களில் நாம்இன்று காணும் தெய்வீக அமைதி அழிந்துவிடும்" என்று கூறினார்.

68 பேர் இடமாற்றம்

உடுப்பிட்டி வியா. இலங்கை விவசாய இலாகாவின் உணவு உற்பத்தி மேற்பார்வை அதிகாரிகளாகக் கடமையாற்றிய 68பேர் இம்மாதம் முதல் வடமாகாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

விஞ்சைத்தம்பி உபதலைவர்

சாவகச்சேரி. வியா. சாவகச்சேரி நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் நகரசபை உபதலைவர் தெரிவு நடைபெற்றது. இருவர்போட்டியிட்டனர். திரு. பொ. ராசையாவை திரு. மு. விஞ்சைத்தம்பி மூன்று அதிகப்படியானவாக்குகளால் வெற்றிபெற்றார்.

மூவர்கைது இவர்கள் திருட்டுக்கோஷ்டியாம்

பளை, வியாழன். புலோப்பளை கிராமத்தில் திருட்டு சம்பந்தமாக இதுவரை மூவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ஒரு கோஷ்டியாக இயங்கிவருகின்றனர் என விசாரணையின்பின் பொலிசாருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இன்னும் சிலசந்தேகநபர்களை பொலிசார் தேடுகின்றனர்.

குறைபாடு நீங்குகிறது

ஊர்காவற்றுறை, வியா. சரவணைக் கிராமத்திற்குச் சொந்தமான "புளியம்பிட்டி" பொது மயானத்தில் வேலணைக் கிராமசபையின் நன்கொடைப்பணத்தால் மடமும் கிணறும் அமைக்கப்பட்டு வருகிறது. நீண்டகாலமாக இருந்து வந்த குறைபாடு விரைவில் நீங்கும் என அறிவிக்கப்படுகிறது.

கால சக்கரமும் கால் நடைகளும்

இலங்கையில் ஒரு கமத் தொழில் புரட்சி நடந்து கொண்டிருக்கிறதா?

அறிகுறிகளும் சூசகங்களும் அப்படித்தான் சொல்லுகின்றன.

1948-ம் ஆண்டில் நாம் சுதந்திரம் பெற்றவுடனே நமது முதலாவது பிரதமர் டி. எஸ். சேனநாயகா, விவசாயத்துக்கு ஊக்கமளித்தால் தான் நாடு முன்னேற முடியும் என்று நினைத்து கல்லோயா, பராக்கிரம சமுத்திரம், கந்தளாய் முதலிய பெரும் விவசாயத் திட்டங்களைத் தொடங்கி வைத்தார். இவற்றைத் தவிர நாடு முழுவதிலும் கமத்தொழில், முக்கியமாக நெற்பயிர் செய்கை, விருத்தியடைய வேண்டுமென்ற நோக்கத்துடன் யந்திர விவசாயத்தை மக்கள் மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்ற பிரசாரங்கள் நடத்தப்பட்டன.

அப்பொழுது எம்மிடம் நிறையப்பணமும் இருந்தது. வெளிநாட்டு செலாவணிக்கு நாம் இன்று போல் அன்று திண்டாடவில்லை. யந்திர விவசாயத்துக்கு வேண்டிய டிராக்டர்கள் முதலிய சாதனங்கள் ஏராளமாக வந்து குவிந்தன. நமது அரசாங்க கமக்களில் விவசாயப் போதனாசிரியர்கள் அவற்றின் மகிமையை விவசாயிகளுக்கு நடைமுறையில் செய்து காட்டினர். கிராமங்கள் தோறும் சென்று யந்திர விவசாயம் தான் சிறந்த மார்க்கம் என்று பிரசாரப் பறை சாற்றினார்கள்.

இந்தக் காலச் சக்கரம் ஒரு முழு 'ரவுண்ட்' சுற்றிவந்துவிட்டது.

இப்பொழுது யந்திர விவசாயத்துக்குத் தேவையான கருவிகளை மேல்நாடுகளிலிருந்து தருவிப்பதற்கு நம்மிடம் போதிய வெளிநாட்டு செலாவணி இடையாது. ஏற்கனவேயுள்ள டிராக்டர் யந்திரங்களுக்கு உதிரிப்பாகங்களைத் தருவிப்பதற்குக் கூட நம்மிடம் வழியில்லை.

இந்த நிலைமையில் அரசாங்கம் தன் பல்லவியை மாற்ற வேண்டியது தானே!

முன்பு டிராக்டர்களையும் யந்திரங்களையும் காவிக்க உபயோகிகள் என்று சொல்லி வந்தவர்கள் இப்பொழுது 'அதெல்லாம் தவறு. நீங்கள் பழைய படி

நாட்டிலும் நகரிலும்

கால் நடைகளைத்தான் உபயோகியுங்கள். அவையால் தான் நன்மையுண்டு' என்று கூறுகிறார்கள்.

சென்ற வாரம் ஒரு மாவட்ட விவசாய அதிகாரி கமக்காரரை விழித்து பிரசங்கம் செய்தார்.

மாடுகளும் எருமைகளும் தான் உங்கள் சிறந்த நண்பர்கள். அவை உழவுக்கும் பயன்படும். பாலும் எருவும் தரும். அவைக்கு உதிரிப்பாகங்கள் தேவையில்லை. அவை இறைச்சிக்கும் பயன்படும்.

என்றெல்லாம் உபதேசம் சொன்னார்.

காலம் மாறி விட்டதல்லவா?

--வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆயுர்வேதத்துக்கு புத்துயிர் அளித்தது பண்டாரநாயக்கா அரசாங்கம்"

உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பாராட்டு

குரும்பசிட்டி, வியாழன் "கிராம சபைகளின் தொண்டுகளில் சுகாதார முதன்மையானது. ஆயுள் வேத வைத்திய முறைகள் மேல் நாட்டு வைத்தியத்திற்கு விரோதமானதல்ல; மக்களின் வாழ்க்கை முறை பண்புகளுக்கு சுதேசவைத்திய முறைகள் பலனளிக்கக்கூடியன. 1956-ம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் ஆயுள்வேத வைத்தியத்திற்கு மதிப்புச் சலுகைகள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் காலம் சென்ற பண்டாரநாயக்காவின் அரசாங்கம் இவ் வைத்திய முறைக்கு புத்துயிர் அளித்தது. இலங்கையில் ஆயுள் வேத வைத்திய ஆராய்ச்சி நிலையம் ஒன்றினையும் அன்றைய அரசாங்கம் அமைத்திருந்தது".

ஏழாலை கிராமசபையினரால் நிறுவப்பட்டுள்ள சித்த ஆயுள் வேத வைத்தியசாலையை சைவசமய ஆசாரப்படி குத்து விளக்கேற்றித் திறந்து வைத்த பின்னர் உரை நிகழ்த்துகையில் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினார். திறப்பு விழாவை யடுத்து சைவ மகாஜன வித்தியாசாலை மண்டபத்தில் கிராமசபைத் தலைவர் திரு. கே. சிவகுரு தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

திரு. மாணிக்கவாசகர் மேலும் கூறியதாவது:- இக்கிலாந்து தேசத்தில் கல்வி நிறுவனங்கள் உள்ளூராட்சி மன்றங்களினாலேயே நிர்வகிக்கப்படுகின்றது. இந்நிலை இலங்கையிலும் கூடிய விரைவில் ஏற்படலாம். கிராம சபைகள் போக்குவரத்து விளையாட்டுப் போன்ற துறைகளிலும் அபிவிருத்தி செய்ய மக்களுக்கு உதவுகின்றது. மக்களின் கலாச்சார பண்பாடுகளைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் இலக்கிய விழாக்களையும் உள்ளூராட்சி மன்றங்கள் நடாத்திவருகின்றனவாம். மாவட்டத்தில் உள்ள 42 கிராம சபைகளில் 28 சபைகள் ஆயுள் வேத வைத்தியசாலைகள் நிறுவ விதலைத்தாபனம் அமைக்க நிதி உதவியுள்ளது.

வலி வடக்கு காரியாதிகாரி திரு. சி. முருகேசபிள்ளை திரு. எஸ். அம்பலவாணர், திரு. நாவேந்தன் ஆகியோர் உட்பட வேறு பலரும் உரையாற்றினர்.

விவசாய படை

இளைஞர்களுக்கு அழைப்பு

உடுப்பிட்டி, வியாழன் "தேசிய அரசாங்கத்தால் திரட்டப்படும் விவசாய இளைஞர் படையில் தேசபக்தியுடன் சேர்ந்து விவசாயத்துடன் நமது தாய்நாட்டிற்குச் சேவை யாற்ற எல்லாத் தமிழ் இளைஞர்களும் முன்வரவேண்டும்.

விவசாயப்படையில் சேர முன்வருமாறு சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் தமிழ் இளைஞர்களுக்கு விடுத்த கோரிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"நமது முதாதையர்கள் உழவுத் தொழிலுக்கு மிகுந்த மதிப்புக்கொடுத்து வாழ்ந்தார்கள். அதனால் தான் அவர்களால் பிறநாட்டவரின் உதவியை எதிர்பார்க்கவேண்டிய நிலையில் இல்லாமல் வாழ்க்கை நடத்த நிறைய போஷாக்குள்ள உணவுகளை உண்டு நெடுநாள்வாழ முடிந்தது. காலப்போக்கில் அந்நியநாகரிக மோகமும் மண்வாடும் நம் இளைஞர்களைக் கவர்ந்து இழுத்து அவர்களை சீர் குலைய வைத்துவிட்டது. இதனால் நாட்டில் வறுமையும், பிணியும் வேலையில்லாத்திண்டாட்டமும் பெருகின. இன்று நாம் எமது தவறினை உணர்ந்துவிட்டோம். தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களிலேபெரிய அதிகமான நிலங்கள் விவசாயச் செய்கைக்கு உகந்தவையாக இருக்கின்றன. எனவேதான் இந்த விவசாயப்படையில் தமிழ் இளைஞர்கள் முன்நின்று உழைக்க முன்வருமாறு கேட்டுக்கொள்கிறேன்." என்று திரு. வி. என். நவரத்தினம் கோரியுள்ளார்.

எம். பி. கோரிக்கை

கிளிநொச்சி, வியாழன் கிளிநொச்சி - பரந்தனிடையே இரட்டைத் தட்டு பஸ் சேவை நடத்துமாறு கோரி கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் டிப்போ முகாமையாளருக்கு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி உப டிப்போவில் உள்ள பஸ்களின் நிலை மிகவும் மோசமாக இருப்பதால் சேவைக்கேற்ற பஸ்களை அனுப்பி இப்பகுதி மக்களுக்கு கஷ்டமில்லாத போக்குவரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு எம். பி கேட்டுள்ளார்.

இப்பகுதி மக்கள் பஸ் சேவையின் சீர்கேட்டை திரு. இரத்தினம் திட்டமுறையிட்டு கவனத்தைத் தொடர்ந்து மேற்படி கடிதத்தை அவர் எழுதியுள்ளார்.

சேலை வாங்கினால் காற்சட்டைத்துணி

உடுவில், வியாழன் கப்பன்புள்ளி கொடுத்து ஒருசேலை வாங்குபவர்களுக்கு முற்றுபார் காற்சட்டைத்துணி வழங்கப்படுகின்றது. உடுவில் மேற்கு ஐக்கிய பண்டகசாலையில் இவ்வாரம் மேற்படி காற்சட்டைத்துணி பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. நீண்டநாட்களின் பின்னர் இப்பண்டகசாலையில் இப்பொழுதான் காற்சட்டைத்துணி விநியோகம் நடைபெறுகிறது.

தரம் பிரிக்கும் கொள்கையால் கிராமப்பாடசாலைகள் பாதிப்பு

பருத்தித்துறை எம். பி. கண்டனம்

தாளையடி, வியாழன் செம்பியன்பற்று ஸ்ரீ சு. த. க. பாடசாலையின் புதிய கட்டிடத்தை பருத்தித்துறை எம்.பி திரு. க. துரைரத்தினம் திறந்துவைத்தார். கல்வி அதிகாரி திரு.ம. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. க. துரைரத்தினம் பேசியதாவது:—

'எட்டாம் வகுப்புடன் பிள்ளைகளைத் தரம்பிரிக்கும் கொள்கையால் கிராமப்புறப் பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். வடமராட்சி கிழக்குப்பகுதியில் ஒரு பாடசாலைகூட கல்வி வசதிகளைக் கொண்டதாக இல்லை. இலங்கை பூராவும் இப்படியான வசதியற்ற பாடசாலைகளும் தரங்குறைந்த படிப்புமிருக்கையில் தரம்பிரிக்கும்பொழுது நகரப் பாடசாலைகளில் படிக்கும் மாணவர்கள் உத்தியோகத்தவர்களாகவும் கிராமப் புறப்பாடசாலையில் படிக்கும் மாணவர்கள் தொழிலாளிகளாகவுமே வருவார்கள். இந்தக்குறை நீங்க சகல பாடசாலைகளும் ஒரே தரத்திற்கு வந்தபின்தான் தரம் பிரிக்கும் வேலையிலீடுபட வேண்டும். இதைத்தான் பாராளுமன்றக் குழுவுக்கும் கல்வி மந்திரிக்கும் பல தடவைகள் விளக்கம் கொடுத்துள்ளோம்'.

கமத்தொழிலிலும் உணவுஉற்பத்தியிலும் மக்கள் ஊக்கம் செலுத்தி நாட்டின் உணவுப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய பாடுபட வேண்டும். வருடாவருடம் இறக்குமதியில் ஏராளமான பணம் வெளிநாடுகளுக்குப் போய்ச் சேருகிறது. இந்தப் பணத்தை வெளியில் போகாதவாறு கட்டுப்படுத்தினால் பின்பிடியை அதிகரிக்கமுயற்சிக்கவேண்டும். இப்பகுதியிலிருக்கும் பாடசாலைகளில் ஒன்றை சகல நவீன வசதிகளும் கொண்ட ஒரு பாடசாலையாக மிகக்குறுகிய காலத்தில் அமைத்துத்தர நான் முயற்சிசெய்வேன்'.

பின் காரியாதிகாரி திரு. எஸ். கந்தப்பிள்ளை பேசுகையில் பாடசாலைப் படிப்புடன் நின்றுவிடாமல் குடிசைக் கைத்தொழிலும் மாணவர்கள் கைக்கொடுத்தால் பொருளாதாரத்தை முன்னேற்றலாமென்றும் கிராமமக்களின் மக்கள் ஒற்றுமையாக நாட்டுக்குச் சேவை செய்யும்படியும் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் செம்பியன்பற்றுக்கிராமசபைத்தலைவர் திரு. ஏ. ஐயம்பிள்ளை, திரு. பி. எம். டிக்சனஸ், கிராம சேவகர் திரு. வி. சேதுராமம், கண்டிக்குளம் கிராம சேவகர் திரு. பி. கிரீபன் வெற்றக்கோன், திரு. ஜி. மகேந்திரம்பிள்ளை, மகாதேவக் குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் திரு சி. சவிமுத்து ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

எதிரி விடுதலை

ஊர்காவற்றுறை, வியா. நாரந்தனைக் கிராமத்தைச் சேர்ந்த சவிமுத்து பிலிப்பையாவை அதே இடத்தைச் சேர்ந்த இராசேந்திரம்பிள்ளை என்பவர் தனக்குக் காயம் விளைவித்ததாகக் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின் பின் நீதிபதி திரு. ஜே. இராசரத்தினம் எதிரியை விடுதலை செய்தார்.

இல்லை! இல்லை!!

சுழிபுரம், வியாழன் சுழிபுரப் பகுதியிலுள்ள சகல வியாபார ஸ்தலங்களிலும், சில்லறை விற்பனைக் கடைகளிலும் உருளைக் கிழங்கு இல்லை, மாவு இல்லை மல்லி இல்லை, மிளகாய் இல்லை, உட்பட இன்னும் தேவையான பொருட்கள் ஒன்றுமே இல்லை. இதனால் பொதுமக்கள் பல கஷ்டங்களுக்குள்ளாகி யிருக்கின்றனர்.

வவுனியா மாவட்டத்தில்

உணவு உற்பத்தியை கூட்ட நடவடிக்கை

வவுனியா, வியாழன் வவுனியா மாவட்டத்தில் உணவு உற்பத்தியைக் கூட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் முதல் ஏற்பாடு இப்போது செயல்படத் தொடங்கியுள்ளது.

வவுனியா மாவட்டத்திலுள்ள சகல பயிர் செய்கைக்குழுக்களுக்கும் பொறுப்பதிகாரியாக ஒவ்வொரு உத்தியோகத்தரை வவுனியா அரசாங்க அதிபர் நியமனம் செய்துள்ளார். இக்குழுக்களுக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக காணி அபிவிருத்தி மேற்பார்வையாளர், விவசாய சேவை மேற்பார்வையாளர் உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் ஆகியோர்களை நியமித்துள்ளார்.

கோலாகலமான ஈழநாடு.....

(8ம் பக்கத் தொடர்ச்சி)

குந்தனர். இடமில்லையென்ற காரணத்தாலோ அல்லது சைக்கிள் ஓட்டப்போட்டியை வசதியாகப் பார்க்க வேண்டுமென்றோ சிலர் மரத்திலும் ஏறியிருந்தனர் சைக்கிளை ஓர் இடத்தில் வைத்து பூட்டிவிட்டு ரசிகப்பெருமக்களுக்கிடையே 'ஊடுருவ'த் தொடங்கினேன்.

"இவ்வளவு சனம் வருமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை. இருந்தாலும் 'ஈழநாடு'க்கு இது ஒரு வெற்றிதான்" என்ற ரசிகர்களின் விமர்சனமும் ...

"குறைந்த அளவு ஓட்டப் போட்டிவைத்த ஒரு புத்தம் புதிய பி. எஸ். ஏ. சைக்கிள் பரிசாகக் கொடுப்பதென்றால்... 'ஈழநாடு'-வின் இந்த முன்மாதிரியைப் பாராட்டாமலிருக்க முடியாது..." என்ற பேச்சும் என் காதில் மோதாமலில்லை.

முதலாவதுபோட்டி ஆரம்பமாவதற்கு பத்து நிமிடங்கள் இருந்தது. போட்டி வீரர்கள் பத்தொன்பது மாணவர்களும் இரண்டுவரிசையில் தங்களது சைக்கிள்களுடன் நின்றுகொண்டிருந்தனர். பொலிஸ்மைதானத்தைச் சுற்றியும் முன்பாகவும் மொய்த்துக் கொண்டிருந்த ஆயிரத்துக்குமதிகமான மக்களின் பார்வை சைக்கிள் வீரர்களையே நோக்கி விழுந்தன.

குழுமியிருந்தவர்களின் நெஞ்சத்தில் எல்லாம்... யார் பி. எஸ். ஏ. வீரராக வரப்போகிறார் என்ற கேள்வி குதித்துக்கொண்டிருந்தது. கேள்விக்குறியைப் போல வீதியின் இரு மருங்கிலும் கூடியிருந்தவர்கள் நிமிர்ந்து வளைந்து குறுகியிருந்தனர். இன்னுமா நாலு மணியாகவில்லையென்று அடித்துக் கொண்டிருந்தனர்.

நான்கு மணிக்கு ஐந்து நிமிடங்கள்

போட்டியிடும் வீரர்கள் எல்லோரையும் ஒரு தரம் நானும் நோட்டமிட்டேன். சிலரது முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது ஒரு சிலரின் முகத்தில் பயமும் குடிகொண்டிருந்தது. ஒரு சிலருக்கு இது புதிய அனுபவம் என்பதை அவர்கள் சொல்லாமலே அவர்கள் முகம் சொல்லிற்று.

'போட்டி ஆரம்பமாவதற்கு இன்னும் நான்கு நிமிடங்கள்தான் இருக்கின்றன. மாணவர்களுக்கானபோட்டி முதலாவதாக நடைபெறப் போகிறது.. இதில் பத்தொன்பது வீரர்கள் கலந்து கொள்கின்றனர். ஆனால் ஒருவர் இங்கு சமுகமளிக்கவில்லை......' என்று அறிவிப்பாளர் ஒலிபெருக்கி மூலம் கூறிக்கொண்டிருந்தார்.

செகண்டுகள் மறையத் தொடங்கின. வீரர்களுக்கு முன்பாகச் செல்லும் பொலிஸ் மோட்டார் சைக்கிள் புறப்படுவதற்குத் தயாராக இருந்தது. அதன் முன்னே திரிசெல்ல மாதேவன்க லிமிடெட் கிராமனத்தாரின் வாகனபாரமாகநின்றது. போட்டியாளர்கள் ஓடும் பாதை போக்குவரத்துக்குத் தடையின்றி ஒழுங்கு செய்யப்பட்டது. எல்லோரும் வழிமீது விழிவைத்துப் பதித்து வீரர்களை எதிர்நோக்கியிருந்தனர்...

அப்பொழுதுதான் அந்தச் சம்பவம் நிகழ்ந்துவிட்டது. குமார் பதினெட்டு வயது மதிப்பிடக்கூடிய ஒரு மாணவன் நெஞ்சம் பதைபதைக்க துடியாய் துடித்துக்கொண்டு பொலிஸ் மைதானத்து முன்னர் ஓடிவந்தான். எதிர்பாராத இச்சம்பவத்தினால் எல்லோருடைய கண்களும் அவன் மீது விழுந்தது!

(தொடரும்)

விறுவிறுப்பான ஒருபோட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி குருநகர் யூனைட்டெட் கோஷ்டிக்கும், சென்றிக்கல் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற 'ஏ'பிரிவுப் போட்டி ஆரம்பத்திலிருந்து முடிவு வரையும் விறுவிறுப்பாகவும் ரசிப்பாகவும் காணப்பட்டது. கடுமையான போட்டியின்பின்னர் குருநகர் கோஷ்டி சென். நீக்கலஸ் கோஷ்டியைத் தோற்கடித்தது.

இப்போட்டி முடிவில் குருநகர் கோஷ்டி 4-0 கோல்களால் சென். நீக்கலஸ் கோஷ்டியைத் தோற்கடித்தது. யாழ் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. எஸ். நாகமணி மத்தியஸ்தம் வகித்தார்.

டில்லியில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத்தொடர்ந்து கடற்படையினரைப்படை அணிவகுப்பு இடம்பெற்றன. இதன் பின்னர் பிரதேச சேனைகள், பொலிஸ், தேசிய படை ஆகிய வீரர்களின் ஊர்வலங்கள் நடைபெற்றன.

அலங்கரிக்கப்பட்ட யானைகளில் இருவர்கள் பவனி வந்த காட்சி சிறப்பாக விருந்தது கலாச்சார பவனியில் பதினேழு அலங்கார வண்டிகள் கலந்துகொண்டன. கடைசியாக 2000 மாணவர்களின் அணி வகுப்பு இடம் பெற்றது.

இறுதியாக இடம்பெற்ற விமான அணிவகுப்பில் படை விமானங்கள் சாகச விளையாட்டுகள் புரிந்து கவர்ச்சியாகப் பறந்து சென்றது கண்களுக்கு விருந்தாக இருந்தது.

கண்ணன்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வின் தந்தை கைது செய்யப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதும் வழக்கு விசாரணை நடைபெறுவதும் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் கான்ஸ்டபிள், கிராமசேவையாளர்மீது வழக்கு

பெண் தாக்கல் செய்தார்

மாவிட்டபுரம், வியா

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கும் கிராமசேவையாளர் ஒருவருக்கும் எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ் வழக்கை உரும்பராயைச் சேர்ந்த பெண்மணி யொருவர் தொடர்ந்துள்ளார்.

கன்னுகம் பொலிஸ்கான்ஸ்டபிளான ஆவைசிங்கா என்பவர் சென்ற மார்கழி மாதம் 26ம் திகதி தனது வீட்டிற்குள் அத்துமீறிப்பிரவேசித்ததாகவும் தன்னை அடித்துக் காயமேற்படுத்தியதாகவும் தன்னுடன் கெட்டமுறையில் நடந்துகொள்ள முயன்றதாகவும் இதற்கு உரும்பராய் கிராமசேவகரான சே. அமிர்தலிங்கம் உடந்தையாக இருந்ததாகவும், கிராம சேவகரும் தனது வீட்டிற்குள் அத்துமீறிப்பிரவேசித்ததாகவும் குற்றங்கள் சாட்டி உரும்பராயைச்சேர்ந்த மரகதவல்லி சிவஞானம் என்னும் பெண்மணி தனது வழக்கறிஞர் திரு. அ. குமரகுலசிங்கம் மூலம் இவ்வழக்கை மல்லாகம் நீதிபதி திரு. டி.எஸ். நிற்சிங்காமுன்னிலையில் தாக்கல்செய்துள்ளார்.

நீதிபதி எதிரிகளை அடுத்த மாதம் 8ம் திகதி கோர்ட்டில் ஆஜராகுமாறு சம்மன்ஸ் அனுப்ப உத்தரவிட்டு வழக்கை அத்திகதிவரை ஒத்திவைத்துள்ளார்.

"பதவிதேடியவர் பரிதவிக்கின்றனர்"

நாவலப்பிட்டி, வியாழன்

"இந்த ஜனநாயக சகாப்தத்திலே தொழிலாளி வர்க்கம் மறுமலர்ச்சிப் பாதையில் சுதந்திரமாகப் பீடுநடை போடத்தொடங்கி விட்டது. இதைக்கண்டு தொழிலாளியை மிதித்து அவர்களைப் படியாகப்பாவித்து பதவி தேடி காலத்திற்குக் காலம் சந்தர்ப்பவாதிகளாக மாறி இன்று தொழிற்சங்கத் தலைவர்கள் எனும் போர்வையில் நடமாடும் முதலாளித்துவபிரதிநிதிகள் பரிதவித்து வாய்டமுற்று வருந்துகின்றனர்."

இவ்வாறு பின்னோபா தோட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தொழிலாளர் தேசிய சங்க மத்திய குழுத் தலைவர் திரு. எஸ். பெருமாள் கூறினார். இக்கூட்டத்திற்கு திரு. ஐயாக்கண்ணு தலைமைதாங்கினார்.

மாணவர்களுக்கு இலவச பாடத்திட்டம்

பண்டத்தரிப்பு, வியா.

மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்தும் வகையில் இளவாலை சென் ஹென்றியரசர் கல்லூரியில் ஆறும் வகுப்பிற்கு மேற்பட்ட ஒவ்வொரு மாணவனுக்கும் ஒவ்வொரு வாரத்திலும் படிக்க வேண்டிய பாடதிட்டம் அடங்கிய பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

இப்புதிய முறையினை மாணவர் தமது பாடங்களை ஆயத்தப்படுத்தவும் ஆசிரியர் பாடத்திட்டத்தின் பிரகாரம் கற்பிக்காத பட்சத்தில் அவர்களைக் கட்டாயப்படுத்தி பாடங்களைப் படிப்பிக்கவும் பரீட்சைகளுக்கு இலகுவாக ஆயத்தப்படுத்தவும் முடியும் என்ற நோக்குடனே இப்புதியமுறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனுல் மாணவர்கள் அதிக பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றனர்.

இத்தனை சோதனை

இமையாணன், வியா

மூன்று மாதங்களுக்குள் உடன்பிறந்த மூன்று சகோதரர்கள் அடுத்தடுத்து இறந்த சம்பவங்கள் இமையாணன் பகுதியிலுள்ள ஒருவீட்டில் நடைபெற்றது. தமையன் இறந்து அவருடைய அந்திஷ்டி சடங்குகள் நடைபெறுவதற்கு சில நாட்கள் இருக்கும்பொழுதே அவருடைய தங்கையாரான தையல்நாயகம் என்பவரும் இறந்தார். இதேபோல் மூன்று மாதங்களுக்குள்ளாக இவர்களின் தமக்கையும் இறந்தார். இதுமாத்திரமன்றி இதேவீட்டில் அடுத்தடுத்து வேறு மரணங்கள் நடைபெற்றுள்ளன.

"குத்திப்போட்டான் என்று கத்தினர்"

சாவகச்சேரி, வியா

"நாங்கள் மூவரும் சந்தையாகடையில் ஒறகண்டு வாங்கிவரும்போது வட்டுக்கச்சிரோட்டிக் எதிர்த்திசையால்வந்தஎதிரி "யார் தியாகுவாபோறது" என்றார். தியாகு, 'ஆம்' என்றதும் 'ஏன் இந்தப் பாதையை அடைத்தது' என்றார் பின்னர் "நீங்கள்சண்டியன்களோ" என்று கூறினார். பின்னர் சேனதிராசாவும் எதிரியும் இழுபறிப்பட்டனர். சிறிதுநேரத்தில் சேனதிராசா "மூர்த்தி குத்திப் போட்டான்" என்று கழுத்தைப்பிடித்துகொண்டே கத்தினர் சேனதிராசாவின் கழுத்தில் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

முரசுமோட்டைக் கொலை வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் மாஜிஸ்ட்ரேட் திரு. ?. பேச் சிவா முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது ரீ. வேவிப்பநாதன் (? வயது) சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கில் முரசுமோட்டையைச்சேர்ந்த சங்கரப்பிள்ளை கணேசமூர்த்தியென்பவர் கதிரவேலு சேனதிராசா(17வயது) என்பவரை குத்திக்கொலை செய்ததாக கிளிநொச்சிப் பொலிசாரால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

மாஜிஸ்திரேட் மேல்விசாரணையைபெப்ரவரி 7ம்தேதி வரை ஒத்திவைத்துள்ளார்.

மோசடி? கால்சட்டைத் துணியில்

உடுப்பிட்டி, வியா

இங்கு மத்தொனுசந்தி என்னுமிடத்திலுள்ள பலநோக்குக்கூட்டுறவுச் சங்க கொள்விலை திடீர்சோதனையிட்டகூட்டுறவுப்பரிசோதகர் ஜப்பானிலிருந்து வரவழைக்கப்பட்ட உயர்ரக காற்சட்டைத்துணிகள் விநியோகத்தில் மோசடி நடைபெற்றுள்ளதாகக் கண்டுபிடித்து மேலிடத்துக்கு அறிவித்துள்ளார். பொதுமக்களின் பாவனைக்காகவழங்கப்பட்டிருந்த 21யார் காற்சட்டைத் துணிகளை மேற்படி சங்கத்தைச்சேர்ந்த ஐந்துநிர்வாகசபை அங்கத்தவர்கள் பொதுமக்களுக்குத் தெரியாமல் தமக்குள் பகிர்ந்துகொண்டதாகப் பாவனையாளர்கள் உதவிக்கூட்டுறவு ஆணையாளருக்கு முறையிட்டதைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

உங்கள் பயிர்களை

பாதிக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தி விளைச்சலை பெருக்கிக் கொள்ளுங்கள்.



மெட்டசிஸ்டொக்ஸ்

புகையிலையை கருமகுத்தும் உறிஞ்சும் பூச்சிகளை அழிக்க மிகச் சிறந்த சாதனம். அழுக்கணவன், பேன், வெண் ஈ கண்டுகுத்தி ஆகியவற்றை அறவே ஒழிக்கும்.



மட்டாசில், டிப்ட்ரெக்ஸ்

இலைகளை தின்று பாழாக்கும் கம்பளி பூச்சிகளை ஒழித்துக் கட்டுவதற்கென்று பிரத்தியேகமாக புகையிலை கிருஷியில் இதை உபயோகித்து நல்ல பயன் பெறலாம்.

இந்த கிருமி நாசினியை புகையிலை கிருஷியில் இலைகளை சாப்பிடும் கம்பளி பூச்சிகளையும் இலைகளை கடித்தும் அரித்தும் நாசப்படுத்தும் மற்ற பூச்சி புழுக்களையும் ஒழித்துக்கட்ட சிறந்தது.



பொலிடோல், பொலிதுமயாஸ்

இலகுவில செயல்படக்கூடியதான இந்த சர்வ கிருமி நாசினி உள்ளூர் கமக்காரர்களால புகையிலையை பாதிக்கும் சகல கிருமிகளையும கட்டுப்படுத்த பாவிக்கப்படுகிறது. அத்துடன் பொலிடோல் ... பின்னர் பயிருக்கு பசுமைத்தன்மையும் அளிக்கிறது.

இதுதவிர ... கிருமி நாசினி புகையிலை கிருஷியில் நோய்களை பரப்பும் கிருமிகளை அதாவது புகையிலையை பாதிக்கச் செய்யும் கம்பளிப் பூச்சிகளை நாடாமல் செய்துவிடுகிறது. தண்டை துளைக்கும் பூச்சிகளையும் மிக சக்தியுடன் அதம் செய்துவிடுகிறது.

அன்ற கோல்

இது புகையிலையில் பரவும் பூஞ்சண தொற்றுநோய்களை அழிக்கும்.

எமது விவசாய இரசாயன பகுதி நவீன முறைகளில் விவசாய இரசாயனப் பொருள் உபயோக முறைகளை செயல் முறைகளில் விரும்பும் கமக்காரர்களுக்கும் விவசாயிகளுக்கும் போதனைகளுடன் செய்து காட்டி உதவி புரிய எப்பொழுதும் தயாராக இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:
றோயல் டிஸ்பென்சரி,
270, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

HAYLEYS

விவசாய இரசாயனப் பொருளாளர்

ஹேலீஸ் லிமிட்டட்,

(விவசாய இரசாயன பகுதி)

தபால் பெட்டி 70, 400, டீன்ஸ் ரோட், கொழும்பு-10

தொலைபேசி: 9206

தொலைபேசி; 96333

BAYER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிக்கெட்

சென்ஜோன்ஸ் வெற்றி

சூரியகுமார் ஆட்டமிழக்காமல் 106 ஓட்டங்கள் எடுத்தார்

யாழ்ப்பாணம், வெள்ளி மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் சென். யோன்ஸ் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சென்ஜோன்ஸ் கல்லூரி இனிங்சாலும் 8 விக்கெட்டுகளாலும் மானிப்பாய் இந்துக்கல்லூரியை வெற்றியீட்டியது.

இப்போட்டியில் சென்ஜோன்ஸ் கல்லூரியின் காப்டன் சூரியகுமார் தனது விக்கெட்டை இழக்காமல் 106 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டார். முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய்க் கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 145 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெயலோகநாதன் 64 ஓட்டங்களும், ஜெயதீசன் (காப்டன்) 31 ஓட்டங்களும் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் சென்ஜோன்ஸ் வீரரான சூரியகுமார் 52 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். சென்ஜோன்ஸ் கோஷ்டி தனது முதல் இனிங்ஸ் ஆட்டத்தில் 2 விக்கட்டுகளை இழந்து 342 ஓட்டங்களைப்பெற்றிருந்தது. இதில் இராசதுரை 86 ஓட்டங்களும், சிவக்குமார் 47 ஓட்டங்களும், காப்டன் சூரியகுமார் விக்கெட்டை இழக்காமல் 106 ஓட்டங்களும், எம். சுரேந்திரா விக்கெட்டை இழக்காமல் 90 ஓட்டங்களும் பெற்றனர். மானிப்பாய் கோஷ்டி தனது 8-வது இனிங்சில் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 75 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஞானேந்திரன் 15 ஓட்டங்களையும், சச்சிதானந்தன் தனது விக்கட்டை இழக்காமல் 14 ஓட்டங்களையும் பெற்றனர். சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. எஸ்தர்மலிக்கமும், திரு. சற்சிங்கராயரும் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

விளையாட்டுப் போட்டி

சுழிபுரம், வியாழன் வலிகாமம் மேற்கு சனசமூக நிலையங்களின் சமாஜத்தினர் சமாஜ விழாவை முன்னிட்டு விளையாட்டுப் போட்டியை வருகிற சனிக்கிழமை பண்டத்தரிப்பு விளையாட்டு மைதானத்திப் நடாத்துகின்றனர்.

வெற்றி தோல்வியில்லை

பலாலி, வியாழன் பலாலி உரும்பராய் உதை பந்தாட்டக் கோஷ்டிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் பலாலி கோஷ்டிக்கு ஒரு கோலைப் போட்டு வெற்றியீட்டிய 2-ம் பிரிவு பலாலி ஒரு கோலையும் உரும்பராய் ஒரு கோலையும் போட்டு போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. போட்டிக்கு மத்தியஸ்தராக திருஜி ரெரேவேட் கடமையாற்றினார்.

அதிருப்தி

பண்டத்தரிப்பு, வியா. கீரிமலைக்கு இளவாலைச் சந்தியிலிருந்து பஸ் கட்டணம் 15 சதம் மட்டுமே. ஆனால் சித்திரமேழிச் சந்தியிலிருந்தும் கீரிமலைக்குப் போக 15 சதமே அறவிடப்படுகிறது. இக்கட்டணத்தை பத்துச்சதமாகக் குறைக்கும்படி பிரயாணிகள் சங்கத்தை மக்கள் கேட்டுள்ளனர்.

குடியேற்றத்திட்டத்தை பார்வையிட்டனர்

கிளிநொச்சி, வியாழன் கிளிநொச்சி திருவையாறு படித்த வாலிபர் குடியேற்றத் திட்டத்தை குண்டகசாலையில் பயிற்சிபெறும் விசாயமாணவர்கள் கோஷ்டியினர் சென்று பார்வையிட்டனர். கோஷ்டியினரை திருவையாறு குடியேற்றத் திட்ட வாலிபர்களின் பொறுப்பதிகாரி திரு. எம். கைலைநாதன் திட்டக் காரியாலயத்தில் வரவேற்றார்.

திறப்பு விழா

ஊர்காவற்றுறை, வியா: நாரந்தனை வடக்கு மாதர் சங்கத்தினரின் ஆதரவில் நிறுவப்பட்ட புதிய நெசவு நிலையத்தை வடக்குதி அதிபர் திரு. துபயசேகரா திறந்து வைத்தார்.

50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்



அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.

உங்கள் அடுத்த பெரிய சீட்டிழுப்பு:
1967 பெப்ருவரி 3-ம் திகதியன்று நாத்தாண்டியாவில் நடைபெறும்.

1-வது பரிசு ரூ. 100,000

அல்லது 4 ஸ்ரீ 8373-ம் இலக்க மெர்ஸிடெஸ் பென்ஸ் 190 காரும் ரூ. 50,000/- *ரொக்கமும்.



2-வது பரிசு ரூ. 40,000

அல்லது ஒப்பல் ரொக்கார்ட் காரும் ரூ. 20,050/- * ரொக்கமும்

3-வது பரிசு ரூ. 10,000

அல்லது புத்தம் புதிய போர்ட்ட்ராக்டர் (கம்பெனி பட்டியலில் கண்டுள்ள விலை ரூ 14 000/-மாக குறிப்பிடப்பட்டிருக்கும் இந்த ட்ராக்டரை மெஸர்ஸ சத்தியவதி ஸ்டோர்ஸ் அன்ட் மோட்டார் ட்ருஸ்ஸ் போர்ட் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் உபசரணையுடன்)



விசேஷமாகக் குறைக்கப்பட்ட விலையான ரூ. 10,000 க்கு வழங்கப்படுகிறது.

கடந்த இரண்டு கார் சுவீப்பில் 100 அதிர்ஷ்ட சாலிகள் ரொக்கமாக தலா ரூ 1064 00 பெற்றார்கள்.

இந்தக் கார்களையும், ட்ராக்டரையும் வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப் பின்னர் 14 நாள்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கோலாகலமான 'ஈழநாடு' சைக்கிள் ஓட்டப்போட்டி

திருமண அழைப்பு

சதாசிவம் — கனகமணி

ஏழாலை வடக்கைச் சேர்ந்த திரு. க. செல்லையா, திருமதி செல்லையா அவர்களின் சிரேஷ்ட புத்திரன் சதாசிவத்திற்கும் (ஆசிரியர், வ/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்) நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில் மேற்கைச்சேர்ந்த திரு. பொ. சுப்பிரமணியம் (C. W. E; ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்) திருமதி சுப்பிரமணியம் அவர்களின் சிரேஷ்ட புத்திரி கனகமணிக்கும் (ஆசிரியை, வ/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்) மணமகளில்லத்தில (28-1-67) தைத் திங்கள் 15-ம் நாள் நண்பகல் 12-56 மணி தொடக்கம் 2-37க்குள்வரும் சுபமுகூர்த்தத்தில் திருமணம் நடைபெறும். நண்பர்களையும் உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொ. சுப்பிரமணியமும் பாரியாரும்,
நந்தாவில் ஒழுங்கை,
கொக்குவில்.

க. செல்லையாவும் பாரியாரும்,
ஏழாலை வடக்கு,
சுன்னாகம்.

1054

கடைசி நேரத்தில் நிகழ்ந்த சம்பவம்

நேற்று முன்தினம் கோலாகலமாக நடைபெற்ற பல நூற்றுக் கணக்கான மக்களையும் கொள்ளைகொண்ட 'ஈழநாடு' சைக்கிள் ஓட்டப் போட்டி ஒரு குறைந்த நேர 'மருந்தாக' அமைந்திருந்த பொழுதிலும்

— மகான் —

பல சிறப்பு அம்சங்களையும் கொண்டிருந்த தென்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. "ஈழநாடு" சைக்கிள் ஓட்டப் போட்டியைப் பற்றிச் சுருக்கமாக இங்கு சொல்வதென்றால் யாழ்ப்பாணத்தில் முன்னர் எப்பொழுதும் இடம்பெறாத சில முக்கிய அம்சங்களை இப் போட்டி உள்ளடக்கி இருந்ததென்று துணிச்சலுடன் கூறலாம்.

புதன்கிழமை (பிற்பகல்) மூன்று மணியிருக்கும். யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். இடத்தை நெருங்க நெருங்க என் இதயம் 'படக்... படக்...' என்று அடித்துக் கொண்டிருந்தது. யாழ்ப்பாணம் கோட்டையைச் சுற்றியுள்ள வீதியின் வழி நெடுகிலும் ரசிகர்கள் கூட்டம் கூட்டமாக நின்றுகொண்டிருந்தனர். எனது கைக்கடிகாரத்தை மீண்டும் ஒரு தடவை பார்த்தேன் நேரம் சரியாகத் தானிருந்தது. போட்டி ஆரம்பமாவதற்கு ஒருமணி நேரத்துக்குமுன்னதாகவே இங்கு ரசிகர்கள் குழுமி விடுவார்கள் என்பது நான் எதிர்பாராத ஒன்றாகும்.

யாழ். கோட்டையை ஒரு தரம் எனது 'பி.எஸ்.ஏ' சைக்கிளில் சுற்றிவிட்டு பொலிஸ் மைதானத்தை அடைந்தேன். மைதானத்திலும், சைக்கிள் வீரர்கள் ஓடும் பாதையின் இருமருங்கிலும் ரசிகர்கள் நிறைந்தி

(5-ம் பக்கம் பார்க்க)

பரிசு பெற்றவர்கள்

மாணவர்கள் சைக்கிள் ஓட்டப்போட்டி முடிவுகள்:

(1) வி. நவரத்தினம்.
நேரம்: 18நிமிடம் 42 வினாடி
இவருக்கு கார்கில்ஸ் நிறுவனத்தார் அளித்த பி. எஸ் ஏ. புதிய சைக்கிள் பரிசாகக் கிடைத்தது.

(2) எம். கே. கலீம்
[இவருக்கு கிரிக்கெட் மட்டை பரிசாகக் கிடைத்தது]

வயது வந்தோருக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி:

(1 என். மகேந்திரன்
நேரம்: 36 நிமிடம் 48 1/2 வினாடி
[இவருக்கு கார்கில்ஸ் நிறுவனத்தாரின் பி. எஸ். ஏ. சைக்கிள் கிடைத்தது]

(2) ஏ. எஸ். எம். ரபீக்.
[இவருக்கு 'குக்கர்' பரிசாகக் கிடைத்தது]

பனி காலமும், கிரந்தித் தோய்வும், முட்டு இருமலும்

காலஞ் சென்ற திரு கந்தப்பிள்ளை சிற்றம்பலம் சண்முகரெத்தினம்
அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட

யமுனா மருந்துப் பாகத் தொழிலகம்

(Jamuna Pharmaceutical Industries)

யாழ்ப்பாணத்தில் மார்கழி, தை, மாசி, பங்குனி மாதங்களில் பனியின் உபத்திரவத்தினால்

பாலர்களுக்கும் சிறுபிள்ளைகளுக்கும்
கிரந்தித் தோய்வு, முட்டு ஏற்படுகின்றது

பெரியோர்களுக்கும் தோய்வு, சுவாச முட்டு, ஈழை, இழுப்பு

முதலியன இப்பனிக்குளிர் காலத்தில் தலைகாண்பிக்கும். இவ்வியாதி பரம்பரைக் காரணமாகவும் சில உணவுகள் ஏற்றுக்கொள்ளாமையாலும் அயல் அண்டையினின்று எழும் காற்றுலும் ஏற்படுகின்றன.

முன்னோர்கள் இதை அறிந்து அவற்றிற்கேற்ப மருந்துகளைத் தந்து இருக்கின்றனர். பிரதானமாய் பாலர்களுக்கும், சிறுபிள்ளைகளுக்கும்

'கிரந்தித் தோய்வு, ஏனாதி'யையும் 'வெற்றிலைச் சாற்றுக் கோரோசனை' மாத்திரைகளையும்
தந்திருக்கின்றனர்.

இந்நோய் காரணமாக மலபந்தத்தினால் வருந்துவோருக்கும்

'திரிகுண தைலமும்' பெரியோர்களின் தோய்வு இருமலுக்கு 'கஸ்தூரி மிருத்தியாதி'
முதலியவற்றையும் தந்திருக்கின்றார்கள்.

மேற்படி மருந்துகளை அநேக ஆண்டுகளாகப் பாவித்து திருப்தி கண்டபடியால் பொதுமக்கள் அறிதற் பொருட்டு இவற்றை முதன் முதலாக பிரசுரம் பண்ணுகிறோம்.

1. கிரந்தித் தோய்வு ஏனாதி 15 மாத்திரைகள் 5 நாட்களுக்கு தினம் 3 வேளை கொடுக்க. விலை ரூபா 4-50 ஆகும்
2. மலபந்தம் உள்ளவர்களுக்கு 'திரிகுண தைலம்' 2 அவுன்ஸ பிரமாணம் 1 தேக்கரண்டி தினம் ஒரு வேளை கொடுத்துவரவும். விலை ரூபா 4-00 ஆகும்.

பெரியவர்களுக்கு தோய்வு, முட்டு இழுப்புக்கு 5 நாட்களுக்கு வேண்டிய 10 சரை தூள் 5 ரூபா, 8 நாட்கள் குடிக்கும் அரிஷ்டத்திற்கு நான்கு ரூபா.

கவனிப்பு: மேற்படி மருந்துகளின் விலை முன் சரசம். ஆனால் இப்போது 180 கிறெயின் கொண்ட ஒரு தோலா கோரோசனை விலை 12-00 ரூபாவிலிருந்து 65-00 ரூபாய்க்கு ஏறியுள்ளது. கஸ்தூரியும் ஒரு தோலா 26 ரூபாவிலிருந்து 180 — 200 ரூபாவரை ஏறிவிட்டது. ஆகவே இச்சரக்குகள் சேரும் மருந்துகளின் விலையும் அதிகரித்துக்கொண்டது பற்றி விசனிக்கின்றோம்.

பதிவு செய்யப்பெற்ற ஆயுள்வேத வைத்தியர்கள் தொகையாக யமுனா மருந்துப் பாகத் தொழிலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
மற்றையோரும் மேற்படி மருந்துகளை கீழ்க்காணும் ஸ்தாபனங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

இவற்றை மேற்படி யமுனா மருந்துப்பாகத் தொழிலகம் இருவைத்திய ஸ்தாபனங்களிலும் எந்நேரமும் எந்நாட்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

1. ஆயுள்வேத மருத்துவசாலை
55, சிவன் கோவில் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

2. ஆயுள்வேத மருத்துவசாலை
69, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலை பேசி இல. யாழ்ப்பாணம் 546

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜனவரி 27-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org